**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்பு (2011–12 ஆம் ஆண்டு) – மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களை ஊக்குவிக்க மாணவர்களில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 1000 பேருக்கும், மாணவிகளில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 1000 பேருக்கும் வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்க ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை ( நிலை) எண்:122

நாள் : 02.12.2011

கார்த்திகை 16, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.43, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.03.1995.
2) ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.உ2/12934/11, நாள் 08.6.11 மற்றும் 26.08.2011.

-------

ஆணை :

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலைப்பள்ளியில் அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில், அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களில் முதல் 1000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1000 பேருக்கும் முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றிற்கு ரூ.1500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கி ஆணையிடப்பட்டது.

2) 2011–12 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களில் முதல் 1000 பேருக்கும் மாணவிகளில் முதல் 1000 பேருக்கும் அவர்களது மேல் படிப்பை தொடர்ந்து படித்திட முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகைத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் இவ்வாண்டிலிருந்து இத்தொகை ரூ.3000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

3) இதனை தொடர்ந்து ஆதிதிராவிடர் நல ஆணையர் தமது 26.08.2011 நாளிட்ட கடிதத்தில் மேல்நிலைப்பள்ளியில் அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில், அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களில் முதல் 1000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1000 பேருக்கும் வழங்கப்படும் முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகையினை ரூ.1500/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தி வழங்கவும், இதன் மூலம் தோராயமாக 3500 மாணவ மாணவியர் பயனடைவர் என்றும் 2011–12 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.67.64 இலட்சம் என்றும் தெரிவித்து இதனால் ஆண்டிற்கு ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.37.36 இலட்சத்தை

ஒப்பளிப்பு செய்து வழங்குமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று மேல்நிலைப்பள்ளி அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ / மாணவியர்களை ஊக்குவிக்க ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில் முதல் 1000 மாணவர்களுக்கும், மாணவிகளில் முதல் 1000 மாணவிகளுக்கும் அவர்களின் மேல்படிப்பினை தொடர 2011–2012–ம் கல்வி ஆண்டு முதல் முதலமைச்சரின் தகுதி பரிசுத்தொகையை ஆண்டொன்றுக்கு ரூ.1500/–லிருந்து ரூ.3000/– ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் KB ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரி கல்வியைத் தொடர முதலமைச்சரின் தகுதி பரிசு வழங்கும் திட்டம் – 12 படிப்புதவி தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் - 02 மெட்ரிக் படிப்பிற்கு மேல்படிப்பு"

(தா.தொ.கு. 2225-01-277-KB-1220)

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.98/ADTW/2011, நாள் 01.12.2011 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:-

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:–

நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
உயர் கல்வித்துறை,, தலைமைச் செயலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.

பிரிவு அலுவலர்